**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 216/2023**

**Prosecution witness : அ.சா.9** **Date : 19.10.2023**

| | |
|---|---|
| **Name : நித்யா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மேட்டூர் அரசு மருத்துவமனை முதுநிலை உதவி மருத்துவராக உள்ளேன். கடந்த 2022–ம் வருடத்தில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணியில் இருந்தபோது, கடந்த 28.09.2022–ம் தேதியன்று காலை 10.25 மணிக்கு குற்றஎண்.215/2022 என்ற எண் தொடர்புடைய சாலை விபத்தில் இறந்துபோன சக்திவேல் த/பெ பழனிசாமி வயது 26 என்ற ஆண் சடலத்தை தலைமைக்காவலர் ரவிச்சந்திரன் அடையாளம் காட்ட பிரேத பரிசோதனை காலை 10.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

2) சடலம் மல்லாந்த நிலையில் காணப்பட்டது. கண்கள் மூடிய நிலையில் இருந்தது. உடல் விரைப்புத்தன்மையுடன் காணப்பட்டது. கை, கால்கள் நீட்டிய நிலையில் காணப்பட்டது. இவ்வாறாக பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது. பின்வரும் காயங்கள் குறிக்கப்பட்டது.

1) தலையில் உள்ள கபாள எலும்பு உடைந்த நிலையில் இருந்தது.

2) கபாள எலும்பின் பக்கவாட்டில் பின்பகுதி உடைந்த நிலையில் இருந்தது.

3) காபாள எலும்பின் அடிப்பகுதி உடைந்த நிலையில் இருந்தது. மேற்சொன்ன காயத்தில் அதிக ரத்த போக்கு ஏற்பட்டு அதனால் இறப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. மேற்சொன்ன காயத்தினை நான் பிரேத பரிசோதனை அறிக்கையில் பதிவு

செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ. 4** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**